பெரியார் பல்கலைக்கழகம்
**PERIYAR UNIVERSITY**
SALEM - 636 011, TAMIL NADU
State University -NAAC Accredited A++ Grade - NIRF Rank 94,
State Public University Rank 40 – SDG Institutions Rank Band: 11-50
SALEM - 636 011, TAMIL NADU

## விலைப்புள்ளி அறிவிப்பு

பெ.ப./தே.அ/CPE-II/4117/ Toner /2025-43 (25F134765) நாள்: 19.01.2026

ஐயா,

பொருள்: தேர்வாணையர் அலுவலகம் - கல்லூரி தேர்வு வினாத்தாள் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் அச்சு மற்றும் நகல் எடுக்கும் இயந்திரத்திற்கு கருப்பு மை உருளை ஒன்று கொள்முதல் செய்தல் - தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் - 1998 மற்றும் 2000 - ஆம் ஆண்டு விதிகளின்படி, விலைப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்தல் விலைப்புள்ளி கேட்பு - தொடர்பாக.

பார்வை: இதே எண்ணிட்ட இவ்வலுவலகக் குறிப்பாணை நாள்: 14.01.2026

******

தேர்வாணையர் அலுவலக, கல்லூரி தேர்வு வினாத்தாள் பிரிவில பயன்படுத்தப்பட்டு வரும் அச்சு மற்றும் நகல் எடுக்கும் இயந்திரத்திற்கு கருப்பு மை உருளை ஒன்று கொள்முதல் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| Sl.No | Particulars | Qty | Rate (Per No) Rs. P. | Tax Applicable | Total Amount Rs.P. |
|---|---|---|---|---|---|
| 1 | **Machine Model: CANON 6555i**<br>**Black Toner**<br>**CRE-III Section** | 01 | | | |

**நிபந்தனைகள்:**

1. விலைப்புள்ளிகள் 29.01.2026 தேதி அன்று மாலை 3 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். அன்று மாலை 4 மணிக்கு விலைப்புள்ளிகள் திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2. தங்கள் நிறுவன முகவரியிடப்பட்ட கடிதத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள பொருளுக்கு விலையை அளித்து இத்தத் தகவல் கடிதத்தின் நகலை இணைத்து அனுப்ப வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் கேட்கப்பட்டிருப்பின் இதில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையின்படி விலையைக் குறிப்பிட வேண்டும்

3. விலைப்புள்ளிகளில் ஒவ்வொரு பொருளின் தொகையும் பைசா வீதத்தில் இல்லாமல் முழுத்தொகையாக (Round Figure) இருக்க வேண்டும். மேலும் மொத்தத் தொகை கண்டிப்பாக எண்ணிலும், எழுத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரியார் பல்கலைக்கழக தேர்வாணையர் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். விலைப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையானது வண்டிச்சத்தம்,

புகை வண்டிச்சத்தம், கட்டுமானச் செலவு, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

4. விலைப்பட்டியலில் (Invoice/Bill GST வரி தனியே காண்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு இல்லையெனில் பட்டியல் தொகையில் வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதத் தொகை வழங்கப்படும்.
5. மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குத் தகுந்த உத்திரவாத காலத்தைக் குறிப்பிடவேண்டும்.
6. விலைப்புள்ளி உறையின் மேல் **"Black Toner" விலைப்புள்ளி சமர்ப்பித்தல் கடித எண்: .பெ.ப/தே.அ/CPE-II/4117/25F134765" சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள்: 29.01.2026. என்று கண்டிப்பாக எழுதி தேர்வாணையர், அலுவலகம் பெரியார் பல்கலைக்கழகம், சேலம்** - 636 011 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
7. விலைப்புள்ளியில் எந்தவொரு திருத்தமும் இருக்கக்கூடாது அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிட வேண்டும்.
8. அனைத்துக் கடிதத் தொடர்புகளுக்கும் இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண் மற்றும் தேதியைக் குறிப்பிட வேண்டும்.
9. குறிப்பிடப்படும் விலையின் மதிப்பு ஆறு மாத காலம் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.
10. TIN/PAN மற்றும் GST சான்று எண்கள் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
11. எந்தவொரு காரணத்திற்காகவும் எவ்வித முன்னறிவிப்புமின்றி விலைப்புள்ளியை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
12. தாங்கள் வழங்கும் உபகரணத்தின் Brand Name-ஐ குறிப்பிடப்படவேண்டும்.

19.01.26

**தேர்வாணையர்(பொ)**

19/1/26

பெறுதல்: இயக்குநர் (இணையதளத்தில் விலைப்புள்ளிகள் அறிவிப்பினை வெளியிட)
கணினி மையம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 11.